N-1770

COURSE CODE
205111

**ONLINE PROGRAMME EXAMINATIONS**
**M.A. DEGREE EXAMINATION, MAY 2025**
**First Year - First Semester**
**TAMIL**
**இக்கால இலக்கியம்**
**(CBCS - 2020 onwards)**

Time : 2 Hours | Maximum : 75 Marks

PART - A (33 X 1 = 33)

Answer **all** the questions.

1. பாரதியாருக்கு ”பாரதி“ என்ற பட்டம் சூட்டி மகிழ்ந்த மன்னன் யார்?

(a)சேதுபதிமன்னர் (b)எட்டயபுர மன்னர்
(c)பல்லவ மன்னர் (d)சேரமன்னர்

2. “வந்தே மாதரம்“என்பதன் பொருள் யாது?

(a)தாய் மண்ணைப்போற்று (b)பாரதம் வந்தது
(c)தாய்மையை வணங்கு (d)பாரதம் பாடு

3. பாரதிதாசனின் இருண்டவீடு வெளிவந்த ஆண்டு எது?

(a)1941 (b)1944
(c)1938 (d)1940

4. கண்ணகி - புரட்சிக்காப்பியத்தை இயற்றியவர் யார்?

(a)பாரதியார் (b)பாரதிதாசன்
(c)முடியரசன் (d)ஈரோடு தமிழன்பன்

5. தாய்தனன் ஆசிரியை –என்றவர் யார்?

(a)ஈரோடு தமிழன்பன் (b)நாமக்கல் கவிஞர்
(c)பாரதிதாசன் (d)பாரதியார்

6. மரபுக்கவிதைக்கான உத்திமுறையைக் கூறும் நூல் எது?

(a)நன்னூல் (b)தொல்காப்பியம்
(c)தண்டியலங்காரம் (d)நம்பியகப்பொருள்

7. கீழ்க்கண்டவற்றுள் எது நா.காமராசுவின் படைப்பு அல்ல ?

(a)சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள் (b)சூரியகாந்தி
(c)தாஜ்மகாலும் ரொட்டித்துண்டும் (d)எதிர்பாராத முத்தம்

8. நா.காமராசனின் கறுப்பு மலர்கள் வெளிவந்த ஆண்டு எது?

(a)2015 (b)2017
(c)1996 (d)2003

9. கவிக்கோ என்றழைக்கப்படுபவர் யார்?

(a)வைரமுத்து (b)பாரதிதாசன்
(c)பாரதியார் (d)அப்துல் ரகுமான்

10. கீழ்க்கண்டவற்றுள் அப்துல் ரகுமானின் படைப்பு எது?

(a)பால்வீதி (b)இருண்டவீடு
(c)குடும்பவிளக்கு (d)சூரியகாந்தி

11. ஹைக்கூ என்பதன் பொருள் என்ன?

(a)பொருளாழம் மிக்கது (b)கற்பனை
(c)கவிதை (d)கருத்து

12. அன்பான இராட்சசி – என்னும் படைப்பினைக் கொடுத்தவர் யார்?

(a)ஈரோடு தமிழன்பன் (b)அறிவுமதி
(c)அப்துல் ரகுமான் (d)நா.காமராசு

13. வணக்கம் வள்ளுவ- என்னும் கவிதைத் தொகுப்புக்காக சாகித்ய அகாதெமி விருது பெற்றவர் யார்?

(a)ஈரோடு தமிழன்பன் (b)அப்துல் ரகுமான்
(c)வைரமுத்து (d)அறிவுமதி

14. மரக்கிளைகளைக் கவிஞர் ஈரோடு தமிழன்பன் எவ்வாறு குறிப்பிடுகிறார்?

(a)பசுமை (b)மரத்தின் ரேகைகள்
(c)மரத்தின் மனம் (d)மரத்தின்வேர்

15. நா.முத்துக்குமாரின் தூர் கவிதை எதனை உணர்த்துகிறது?

(a)பெண் சுதந்திரமின்மை (b)குழந்தைத் திருமணம்
(c)முதலாளித்துவம் (d)வரதட்சணைக்கொடுமை

16. தாமரையின் ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும்-கவிதைத்தொகுப்பு வெளிவந்த ஆண்டு எது?

(a)1999 (b)1990
(c)1992 (d)1997

17. ஒரு கதவும் கொஞ்சம் கள்ளிப்பாலும்-கவிதைத்தொகுப்பு வெளிவந்த இதழின் பெயரைக்குறிப்பிடுக.

(a)காலச்சுவடு (b)கணையாழி
(c)மணற்கேணி (d)புதுப்புனல்

18. கலைகளின் அரசி என்றழைக்கப்படுவது எது?

(a)இயல் (b)இசை
(c)நாடகம் (d)நாட்டியம்

19. பம்மல் சம்பந்த முதலியார் எழுதிய நாடகங்கள் எத்தனை?

(a)90 (b)92
(c)93 (d)91

20. வேலைக்காரி நாடகத்தின் தலைமை மாந்தரைக் குறிப்பிடுக

(a)அமிர்தம் (b)சரசா
(c)மூர்த்தி (d)வேதாசல முதலியார்

21. பிரபஞ்சன் பிறந்த இடம் எது?

(a)சென்னை (b)புதுச்சேரி
(c)காரைக்கால் (d)மதுரை

22. ஒரு ஆசை தலைமுறை தாண்டுகிறது- என்னும் சிறுகதையை எழுதியவர் யார்?

(a)நா.முத்துக்குமார் (b)பிரபஞ்சன்
(c)ஜெயகாந்தன் (d)தாமரை

23. சிறுகதை மன்னன் என்றழைக்கப்படுபவர் யார்?

(a)ஜெயகாந்தன் (b)பிரபஞ்சன்
(c)ஜெயந்தன் (d)வைரமுத்து

24. புதுமைப்பித்தனின் இயற்பெயர் என்ன?

(a)பிரபஞ்சன் (b)விருத்தாச்சலம்
(c)சுப்பிரமணியன் (d)முத்தையா

25. ஜெயகாந்தன் எழுதிய முதல் சிறுகதை சௌபாக்கியம் இதழில் எந்த ஆண்டு வெளிவந்தது?

(a)1950 (b)1940
(c)1952 (d)1951

26. ஜெயகாந்தனுக்கு ஞானபீட விருது எந்த ஆண்டு வழங்கப்பட்டது?

(a)2003 (b)2004
(c)2005 (d)2006

27. தி.ஜானகிராமன் பிறந்த ஆண்டு எது?

(a)1921 (b)1920
(c)1922 (d)1923

28. ஒரு தொழிலாளியின் டைரி –என்னும் சிறுகதையின் ஆசிரியர் யார்?

(a)சூரியகாந்தன் (b)ஜெயகாந்தன்
(c)பிரபஞ்சன் (d)புதுமைப்பித்தன்

29. கீழ்க்காண்பவற்றுள் வைரமுத்துவின் படைப்பு எது?

(a)அப்பா (b)விடுகதை
(c)அண்ணன் (d)சிலிர்ப்பு

30. நேசமுடன் என்ற பின்மடல் நடத்தி வருபவர் யார்?

(a)இரா.வெங்கடேஷ் (b)வைரமுத்து
(c)தி.ஜானகிராமன் (d)ஜெயந்தன்

31. கி.ராஜநாராயணனின் சாகித்திய அகாதெமி விருதுபெற்ற புதினம் எது?

(a)கோபல்ல புரத்து மக்கள் (b)கதவு
(c)பிஞ்சுகள் (d)ஒருத்தி

32. அனுராதா ரமணனின் சிறை என்னும் சிறுகதை எந்த பத்திரிகையில் வெளிவந்தது?

(a)ஆனந்த விகடன் (b)குமுதம்
(c)கல்கி (d)கணையாழி

33. இந்தியாவில் முதன்முதலில் தொழிற்சங்கம் எங்கு நிறுவப்பட்டது?

(a)சென்னை (b)மும்பை
(c)கொல்கத்தா (d)டெல்லி

PART - B (7 X 6 = 42)

Answer **all** questions choosing either (a) or (b).

34. (a) பாரதியின் விடுதலை வேட்கை குறித்து எடுத்துரைக்க

[OR]

(b) பெண்ணின் காலைக்கடமைகளாகப் பாரதிதாசன் கூறுவனவற்றை எடுத்துரைக்க

35. (a) நா.காமராசரின் கறுப்பு மலர்கள் உணர்த்துவன யாது?

[OR]

(b) ஹைக்கூவின் இயல்புகளை எடுத்துரைக்க.

36. (a) கவிஞர் தாமரையின் தனித்தன்மைகளுக்குச் சான்று காட்டுக

[OR]

(b) அண்ணாவின் சமுதாயச் சிந்தனைக்கு வேலைக்காரி நாடகம் வழி சான்று காட்டி நிறுவுக.

37. (a) பிரபஞ்சனின் படைப்பாளுமைக்குச் சான்றுகாட்டுக

[OR]

(b) ஜெயகாந்தன் பற்றிக் குறிப்புரைக்க

38. (a) எழுத்துலகில் சூரிய காந்தன் பெறுமிடத்தை விவரிக்க

[OR]

(b) நா.வெங்கடேஷின் கரைந்தவர்கள் உணர்த்தும் செய்திகளை விரித்துரைக்க

39. (a) கி.ராஜநாராயணனின் தனித்தன்மைக்குச் சான்று தருக

[OR]

(b) அனுராதா ரமணனின் திரையுலகப் பணி பற்றி விவரிக்க

40. (a) திரு.வி.க எழுதிய நூல்களை எடுத்துரைக்க

[OR]

(b) வண்ணதாசனின் அகமும் புறமும் உணர்த்துவன யாவை?

N-1770

N-1771

| COURSE CODE |
| --- |
| 205112 |

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**M.A. DEGREE EXAMINATION, MAY 2025**

**First Year - First Semester**

**TAMIL**

**அற இலக்கியங்களும் சமய இலக்கியங்களும்**

**(CBCS - 2020 onwards)**

Time : 2 Hours — Maximum : 75 Marks

PART - A — (33 X 1 = 33)

Answer **all** the questions.

1. நூல்களின் துணிவு எது?

(a)ஒழுக்கத்தைக் கூறுவது (b)பற்றின்மையைக் கூறுவது
(c)முனிவர் பெருமையைக் கூறுவது (d)உண்மையைக் கூறுவது

2. செயற்கரிய செய்வார் எவர்?

(a)கற்றவர் (b)கல்லாதவர்
(c)சிறியர் (d)பெரியர்

3. பொருட்பாலில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?

(a)70 (b)38
(c)25 (d)133

4. மண் பாவை போன்றது எது?

(a)கல்லாதவரின் செல்வம் (b)அறிவில்லாதவனின் அழகு
(c)கல்லாதவன் தன்னைப்புகழ்தல் (d)கல்லாதவன் அவையில் பேசுவது

5. பிணிக்கு மருந்துஎது?

(a)சேயிழை (b)அணியிழை
(c)ஒள்வளை (d)ஒளியிழை

6. மேன்மக்களுக்கு உவமையாக நாலடியார் கூறும் மரம் எது?

(a)பனை (b)பாக்கு
(c)தென்னை (d)மா

7. தொல்காப்பியர் பழமொழியை எவ்வாறு சுட்டுகிறார்?

(a)அங்கதம் (b)வாய்மொழி
(c)முதுசொல் (d)பிசி

8. சங்கத்தமிழ் மூன்றும் தா –என்று பாடியவர் யார்?

(a)கணியன் பூங்குன்றனார் (b)ஔவையார்
(c)கபிலர் (d)முன்றுறையரையனார்

9. வீரசோழிய உரைகாரர் நால் நாற்பது நூல்களை எவ்வாறு கூறுகிறார்?

(a)எண்தொகை (b)நால்மொழி
(c)நாற்பதின் வகை (d)பின்மொழி எண்தொகை

10. பிறவாமை காக்கும் பிரான் –என்று கூறியவர் யார்?

(a)அப்பர் (b)சம்பந்தர்
(c)காரைக்காலம்மையார் (d)மாணிக்கவாசகர்

11. சிவபுராணத்தில் உள்ள அடிகள் எத்தனை?

(a)100 (b)95
(c)90 (d)85

12. இம்மைக்கும்ஏழேழ் பிறவிக்கும் பற்று ஆவான் – யார் கூற்று?

(a)காரைக்கால் அம்மையார் (b)அப்பர்
(c)ஆண்டாள் (d)நம்மாழ்வார்

13. வானாளும்-----------,--------------யான் வேண்டேன்- பூர்த்தி செய்க.

(a)செல்வமும் புகழும் (b)மண்ணரசும் விண்ணரசும்
(c)செல்வமும் விண்ணரசும் (d)செல்வமும் மண்ணரசும்

14. தமிழ் மூவாயிரம் என்பது எது?

(a)திருமூலர் அருளியது (b)நம்மாழ்வார் அருளியது
(c)ஆண்டாள் அருளியது (d)பட்டினத்தார் அருளியது

15. தமிழ் மொழியின் உபநிடதம் என்பது எது?

(a)நம்மாழ்வார் பாடல்கள் (b)வள்ளலார் பாடல்கள்
(c)திருமூலர் பாடல்கள் (d)தாயுமானவர் பாடல்கள்

16. குணங்குடி மஸ்தான் சாகிபு பிறந்த ஆண்டு எது?

(a)1813 (b)1713
(c)1892 (d)1792

17. சொல்லுக்கு இணங்காத -------- பார்த்திருக்க-பூர்த்தி செய்க.

(a)பராபரத்தை (b)இறையருளை
(c)சூத்திரத்தை (d)இன்னமுதை

18. போதிமரம் என்பது

(a)ஆலமரம் (b)அரசமரம்
(c)அசோகமரம் (d)கற்பகத்தரு

19. சுத்தோதனனின் மனைவி கண்ட கனவு யாது?

(a)பிண்டிமரம் வீழ்தல் (b)எண்முடிகளுடன் முளை ஒன்று தோன்றுதல்
(c)விண்ஒளி மாயை வயிற்றில் புகுதல் (d)சிவந்த ஆடையுடன் எருமை மீதேறிச் செல்லல்

20. வேந்தர்க்கு இயல்பு யாது?

(a)அஞ்சாமை (b)ஈகை
(c)அறிவு (d)இவையனைத்தும்

21. ஏரின் உழாஅர் உழவர்- எனத்தொடங்கம் குறள் இடம்பெற்றிருக்கும் அதிகாரம்

(a)வான்சிறப்பு
(b)பொறையுடைமை
(c)பிறனில் விழையாமை
(d)பயனில சொல்லாமை

22. வகை தெரிவான் கட்டே உலகு-என்பதில் கூறப்படும் வகைகள் எத்தனை?

(a)மூன்று
(b)நான்கு
(c)ஐந்து
(d)ஆறு

23. அஞ்சாமை ஈகை அறிவுடைமை ஊக்கமுடைமை-இந்நான்கும் யாருக்கு உரிய இயல்பு?

(a)கற்றவருக்கு உரியது
(b)துறவிக்கு உரியது
(c)அரசருக்கு உரியது
(d)அமைச்சுக்கு உரியது

24. உலகம் எதை அடிப்படையாகக் கொண்டது என்கிறார் வள்ளுவர்?

(a)கல்வி
(b)செல்வம்
(c)மழை
(d)இறைவன்

25. வேந்தர்க்கு இயல்பாகும் நான்கு குணங்கள் எவை?

(a)தூங்காமை கல்வி துணிவுடைமை விரைவு
(b)அஞ்சாமை ஈகை அறிவுடைமை ஊக்கமுடைமை
(c)இயற்றல் ஈட்டல் காத்தல் வகுத்தல்
(d)பொருள்சேர்த்தல் கொடை அருள் செங்கோன்

26. தொட்டனைத் தூறும் மணற்கேணி –என்ற உவமை கூறப்படுவது

(a)பொருளுக்கு (b)ஆற்றலுக்கு
(c)அறிவுக்கு (d)நட்புக்கு

27. வாய்ச்சொற்கள் எப்போது பயனின்றிப் போகின்றன?

(a)ஒருவர் பேசும்போது (b)இருவர் பேசும்போது
(c)அயலார் பேசும்போது (d)கண்ணோடு கண் நோக்கும் போது

28. யானை போன்றவரின் நட்பை என்ன செய்யவேண்டும்?

(a)ஏற்கவேண்டும் (b)நீக்கவேண்டும்
(c)தவிர்க்கவேண்டும் (d)மறக்கவேண்டும்

29. பிரானென்று தன்னைப்பன்-என்று தொடங்கும் பாடலில் எல்லா மனங்களுக்கும் இறைவனாக விளங்குபவன் என்று குறிப்பிடப்படுபவர் யார்?

(a)சிவன் (b)திருமால்
(c)முருகன் (d)இந்திரன்

30. திருவிடை மருதூர் மும்மணிக்கோவை என்னும் சைவநூல் இடம் பெற்றுள்ள திருமுறை எது?

(a)எட்டாம் திருமுறை (b)ஒன்பதாம் திருமுறை
(c)பத்தாம் திருமுறை (d)பதினோராம் திருமுறை

31. தெய்வமணிமாலை படைத்தவர் யார்?

(a)தாயுமானவர் (b)வள்ளலார்
(c)பட்டினத்தார் (d)திருமூலர்

32. செல்லு முறையறிந்து சித்திவழி காணாமற் கழுமரம் போலானேன் - என்றவர்

(a)கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை (b)தாயுமானவர்
(c)குணங்குடி மஸ்தான் சாகிபு (d)வள்ளலார்

33. இனியவை நாற்பது நூலின் ஆசிரியர் யார்?

(a)முன்றுறையரையனார் (b)ஔவையார்
(c)கபிலதேவர் (d)பூதஞ்சேந்தனார்.

PART - B (7 X 6 = 42)

Answer **all** questions choosing either (a) or (b).

34. (a) நீத்தார் பெருமை குறித்து வள்ளுவர் கூறியனவற்றைத் தொகுத்துரைக்க

[OR]

(b) கற்றவர் கல்லாதவர் குறித்த சிந்தனைகளை வள்ளுவர் வழி எடுத்துரைக்க

35. (a) தகை அணங்குறுத்தல் என்றால் என்ன?அது முதற்கண் கூறப்பட்டதன் காரணம் என்ன?

[OR]

(b) நட்பாராய்தல் குறித்து நாலடியார் கூறுவனவற்றை விரித்துரைக்க

36. (a) பழமொழியில் காணலாகும் வரலாற்று புராணகுறிப்புகளுக்குச் சான்று காட்டி விளக்கம் தருக

[OR]

(b) வாழ்க்கைக்கு நல்ல வழியைக் காட்டும் நூல் –நல்வழி இக்கூற்றை நிறுவுக

37. (a) நீதி இலக்கியங்களில் இன்னா நாற்பது பெறுமிடத்தை ஆராய்க

[OR]

(b) இனியவை நாற்பது உணர்த்தும் இனியனவற்றைத் தொகுத்துரைக்க

38. (a) போற்றித் திருத்தாண்டகம் பதிக வரலாற்றைத் தருக

[OR]

(b) ஆண்டாள் கண்ட திருமணக் கனவுகளை விரித்துரைக்க

39. (a) விலங்கினுக்குச் சமமானவர் என்று யாரைத் திருமூலர் குறிப்பிடுகிறார்? சான்றுடன் எடுத்துரைக்க

[OR]

(b) நீருண்டு பொழிகின்ற காருண்டு-என வள்ளலார் குறிப்பனவற்றை விளக்கியுரைக்க

40. (a) பராபரக்கண்ணியின் வழி குணங்குடி மஸ்தான் சாகிபுவின் பக்தி மாண்பினை எடுத்துரைக்க

[OR]

(b) கவிமணியின் கவியாற்றலை ஆசிய ஜோதி வழி எடுத்துரைக்க

N-1771

N-1772

COURSE CODE
205113

**ONLINE PROGRAMME EXAMINATIONS**
**M.A. DEGREE EXAMINATION, MAY 2025**
**First Year - First Semester**
**TAMIL**
# இலக்கணம் -1 தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணம்
**(CBCS - 2020 onwards)**

Time : 2 Hours | Maximum : 75 Marks

PART - A (33 X 1 = 33)

Answer **all** the questions.

1. முதல் எழுத்துக்கள் மொத்தம் எத்தனை?

(a)30 (b)33
(c)3 (d)12

2. சார்பெழுத்துகள் ஒலிக்கும் கால அளவு என்ன?

(a)ஒரு மாத்திரை (b)கால் மாத்திரை
(c)அரை மாத்திரை. (d)இரண்டு மாத்திரை.

3. தம்முன்தாம் மட்டுமே மயங்கி வரும் எழுத்துக்கள் யாவை?

(a)ங்,ஞ்,ட்,ண் (b)ம்,ய்,ல்,வ்
(c)க்,ச்,த,ப் (d)ட்,ற்,ல்,ள்

4. ஒருமொழிக் குற்றியலுகரத்திற்கு எடுத்துக்காட்டு.

(a)நாடியாது (b)பாக்கு
(c)பஃறுளி (d)காட்டியானை.

5. மகரக்குறுக்கம் எத்தனை மாத்திரை பெறும்?

(a)அரை மாத்திரை (b)ஒரு மாத்திரை
(c)கால் மாத்திரை (d)இரண்டு மாத்திரை.

6. உயிரெழுத்துக்களில், ஓரெழுத்தொருமொழி எழுத்துகள் எத்தனை?

(a)2 (b)5
(c)12. (d)7

7. அகரஇகரம் சேர்ந்து எவ்வாறு ஒலிக்கும்

(a)அய் (b)ஐ
(c)அஇ (d)அயி

8. யகரமெய் எந்தஎழுத்துடன் சேர்ந்து மொழிக்கு முதலாகும்?

(a)இ (b)உ
(c)ஏ (d)ஆ

9. மொழிமுதற் குற்றியலுகரத்திற்கு எடுத்துக்காட்டு?

(a)நுந்தை (b)உகரம்
(c)குறுக்கும் (d)முதல்

10. "ஔ' ஈறாகுமிடங்கள் யாவை?

(a)க்,த் (b)ச்,வ்
(c)க் , வ். (d)ந,ம்

N-1772

11. வ'கரக்கிளவி ஈராகும் இடஙகள் எத்தனை?

(a)2 (b)5
(c)3 (d)4

12. மெய்யுடன் சேர்ந்து மொழிக்கு ஈறாகாத உயிரெழுத்து எது?

(a)ஊ (b)ஐ.
(c)ஏ (d)எ

13. உ,ஊ என்னும் உயிரெழுத்துக்கள் எவ்வாறு பிறக்கும்?

(a)அக்காந்து இயலும் (b)இதழ் குவிதலால்
(c)மிடற்றின்வழி (d)பல்லும் இதழும் இணைவதால்

14. சகார ஞகாரம் எவ்வாறு பிறக்கும்?

(a)முதல்நா முதல் அண்ணம் பொருந்துவதால்
(b)இடைநா இடைஅண்ணம் பொருந்துவதால்
(c)நுனிநா நுனிஅண்ணம் பொருந்துவதால்
(d)பல்லிதழ் இணைவதால்.

15. சார்ந்துவரின் அல்லது தமக்கியல்பில்லாத எழுத்துகள் யாவை?

(a)வல்லெழுத்து (b)உயிரெழுத்து
(c)சார்பெழுத்து (d)ஒற்றெழுத்து.

N-1772

16. மொழிமுதல் எழுத்துக்கள் எத்தனை?

(a)22 (b)23
(c)21 (d)24.

17. மொழித்திரிபுகள் எத்தனை வகைப்படும்?

(a)மூன்று (b)ஆறு
(c)ஏழு (d)இரண்டு

18. புளியங்கிளை'என்னும் சொல்லில் இடம்பெறும் சாரியை என்ன?

(a)இன் (b)வெற்று
(c)அத்து (d)அம்

19. எழுத்துச் சாரியைகள் மொத்தம் எத்தனை?

(a)ஒன்று (b)இரண்டு
(c)மூன்று (d)நான்கு

20. நெட்டெழுத்துச் சாரியை எது?

(a)இன் (b)வற்று
(c)அத்து (d)காரம்.

N-1772

21. உடம்படுமெய் வருமிடம் எது?

(a)உயிர் முன் உயிர்
(b)மெய் முன் உயிர்
(c)மெய் முன் மெய்
(d)உயிர் முன் மெய்.

22. முன்னிலை வினைச் சொற்கள் புணர்ச்சியில் எவ்வாறு வரும்?

(a)ஒற்றுமிகும்
(b)வல்லினம் மிகும்
(c)இயல்பாகும்
(d)மெல்லினம் மிகும்.

23. "உரிஞு + யாது" இவ்விரு சொற்களும் எவ்வாறு புணரும்?

(a)உரிஞு யாது
(b)உரிஞ்யாது
(c)உரிஞுயாது
(d)உரியாது.

24. ஏழு + ஐ என்ற சொற்கள் எங்ஙனம் புணரும்?

(a)ஏழை
(b)ஏழினை
(c)ஏழ்
(d)ஏழனை

25. யா? என்னும் வினாப்பெயர் பெறும் சாரியை எது?

(a)அத்து
(b)வற்று
(c)இன்
(d)அன்

26. தெவ்' என்னும் பெயர் பெறும் சாரியை எது?

(a)இன்
(b)ஆன்
(c)வற்று
(d)அம்

27. மகப் பெயர்க் கிளவி பெறும் சாரியை என்ன?

(a)அத்து
(b)உம்
(c)இன்
(d)வற்று

28. குற்றுகர எண்ணுப் பெயர்கள் என்ன சாரியை பெறும்?

(a)இன்
(b)அன்
(c)அக்கு
(d)இக்கு

29. மக என்னும் உயிரீற்றுப் பெயர்ச்சொல் பெறும் சாரியை எது?

(a)இன்
(b)அம்
(c)அத்து
(d)வற்று

30. நாழி முன் உரி என்னும் சொல் வந்தால் எவ்வாறு புணரும்?

(a)நாழியுரி
(b)நாட்டுரி
(c)நாழுரி
(d)நாடுரி

31. சே+ கிளை எவ்வாறு புணரும்?

(a)சேக்கிளை (b)சேய்கிளை
(c)சேங்களை (d)சேகிளை

32. பனை முன் அட்டு வந்தால் எவ்வாறு புணரும்?

(a)பனையட்டு (b)பனை அட்டு
(c)பனாட்டு (d)பனைட்டு

33. அகம் என்ற சொல் முன் கை என்ற சொல்வந்தால் எவ்வாறு மாறும்?

(a)அகம்கை (b)அகக்கை
(c)அக்கை (d)அங்கை.

PART - B (7 X 6 = 42)

Answer **all** questions choosing either (a) or (b).

34. (a) எழுத்துக்களின் வகை பற்றி விளக்கிவரைக

[OR]

(b) தனிமெய் பிறமெய்யுடன் மயங்கி வருதலைச் சான்றுடன் விளக்குக

35. (a) குற்றெழுத்தின் இயல்புகளை விரித்துரைக்க

[OR]

(b) போலி எழுத்துக்கள் என்றால் என்ன?

36. (a) உயிரெழுத்துக்கள் பிறக்கும் வகை பற்றி எடுத்துரைக்க

[OR]

(b) புணர்ச்சியின் மூவகைத் திரிபுகளைச் சான்றுடன் விரித்துரைக்க

37. (a) உடம்படுமெய் தோன்றுமிடத்தினை விவரிக்க

[OR]

(b) உயர்திணைப்பெயர் புணரும் விதம் பற்றிக் கூறுக

38. (a) தாம் நாம் யாம் என்பன புணரும் விதத்தை விரித்துரைக்க

[OR]

(b) யாது அஃது எவ்வாறு புணரும்?சான்று காட்டுக

39. (a) இயல்பாகும் அகராஈற்றுச் சொற்களை விளக்கி வரைக

[OR]

(b) திங்கள் பெயரும் நாள் பெயரும் எவ்வாறு புணரும்?

40. (a) ஏழ் முன் அளவு முதலிய பெயர்கள் வந்து புணருவதனை விவரிக்க.

[OR]

(b) குற்றுகரச் சிறப்புப் புணர்ச்சிக் குறித்துக் கட்டுரைக்க

N-1773

COURSE CODE 205114

**ONLINE PROGRAMME EXAMINATIONS**
**M.A. DEGREE EXAMINATION, MAY 2025**
**First Year - First Semester**
**TAMIL**
**இலக்கியத் திறனாய்வியல்**
**(CBCS - 2020 onwards)**

Time : 2 Hours | Maximum : 75 Marks

PART - A (33 X 1 = 33)

Answer **all** the questions.

1. 'Critic' என்ற சொல்லை முதன்முதலாக இலக்கியத்தோடு தொடர்புபடுத்திப் பேசியவர் யார்?

(a)ஜோசப் அடிசன் (b)ஃபிரான்சிஸ் பேக்கன்
(c)கோலிரிட்ஜ் (d)வேர்ட்ஸ்வொர்த்

2. திறனாய்வாளன் எதில் வல்லவனாக இருக்க வேண்டும் என ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ் வற்புறுத்துகிறார்??

(a)மதிப்பிடுதல் (b)நிறை கூறுதல்
(c)குறை கூறுதல் (d)முடிவு கூறுதல்

3. அ.ச. ஞானசம்பந்தன் குறிப்பிடும் இலக்கியத்துக்கு உரிய பண்புகளுள் அடங்காதது எது?

(a)புதுமை (b)பெருமை
(c)உண்மை (d)பொருண்மை

4. தமிழில் இலக்கியத் திறனாய்வு உரையாசிரியர்களின் காலம் தொட்டுத் தொடங்கியதாகக் கூறியவர் யார்?

(a)க. நா. சுப்பிரமணியன் (b)வெங்கட்சாமிநாதன்
(c)க. கைலாசபதி (d)சி. சு. செல்லப்பா

5. மதிப்பீட்டு முறைத் திறனாய்வின் படிநிலைகளில் அடங்காதது எது?

(a)மதிப்புகளை உணர்தல் (b)மதிப்புகளை உருவாக்குதல்
(c)மதிப்புகளைப் பகுத்தறிதல் (d)மதிப்புகளை எடுத்துக்காட்டி நிறுவுதல்

6. மதிப்பீட்டு முறைத் திறனாய்வு செயல்படும் இரண்டு நிலைகள் யாவை?

(a)வடிவ நேர்த்தி, உள்ளடக்க நேர்த்தி (b)வடிவ நேர்த்தி, உத்தி நேர்த்தி
(c)உள்ளடக்க நேர்த்தி, உத்தி நேர்த்தி (d)இவை எதுவுமில்லை

7. "மனிதன் சிந்திக்கத் தொடங்கியது எந்த நாளோ அந்த நாளில் ஒப்பீடும் தொடங்கிவிட்டது" எனக் கூறியவர் யார்?

(a)ஜி. யு. போப் (b)ஹட்சன்
(c)எச்.எச். ரீமாக் (d)மெக்காலே பாசுனெட்

8. கம்பனை வால்மீகியுடனும் மில்டனுடனும் ஒப்பிட்டு ஆய்வு செய்தவர் யார்?

(a)எஸ். கிருஷ்ணசாமி ஐயங்கார் (b)வ.வே.சு. ஐயர்
(c)எஸ். வையாபுரிப் பிள்ளை (d)க. கைலாசபதி

9. ஒப்பீட்டு முறைத் திறனாய்வின் பயன் யாது?

(a)வட்டார அளவிலான ஒருமைப்பாடு வளர்தல் (b)இன அளவிலான ஒருமைப்பாடு வளர்தல்
(c)சமய அளவிலான ஒருமைப்பாடு வளர்தல் (d)உலக அளவிலான ஒருமைப்பாடு வளர்தல்

10. "இயற்கையாகக் குழந்தைப் பருவத்தில் அமைந்துள்ள அழகு போன்றது கற்பனை" எனக் கூறியவர் யார்?

(a)மு. வரதராசன் (b)ஆபர் கிராம்பி
(c)சு. பாலச்சந்திரன் (d)அடிசன்

11. கற்பனை என்பதற்கு வேர்ஸ்வொர்த் தரும் விளக்கம் யாது?

(a)மனக்கண்ணில் பொருளைக் காணுதல்
(b)பிறருடைய மனநிலைய – இன்ப துன்பங்களை உணர்தல்
(c)படிமங்களில் கருத்தினை ஏற்றிக் கூறுவது
(d)வெவ்வேறாக உள்ள பொருள்களை இயைத்துக் காணுதல்

12. முதனிலைக் கற்பனை, இரண்டாம் நிலைக் கற்பனை எனக் கற்பனையை வகைப்படுத்தியவர் யார்?

(a)கோலிரிட்ஜ்
(b)ஜோசப் அடிசன்
(c)வில்லியம் டெய்லர்
(d)ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ்

13. "காற்றில் ஏறி அவ்விண்ணையும் சாடுவோம்" எனக் கற்பனை செய்தவர் யார்?

(a)சுரதா
(b)வாணிதாசன்
(c)பாரதியார்
(d)பாரதிதாசன்

14. உலகியற் கற்பனையின் இயல்பு யாது?

(a)உலகியல் சார்ந்தது
(b)செயற்கைத் தன்மை உடையது
(c)உண்மையிலிருந்து விலகியது
(d)சிறிதும் தொடர்பு இல்லாதது

15. வெறுங்கற்பனை என வழங்கப்படுவது எது?

(a)இல்லன படைத்தல்
(b)உலகியற் கற்பனை
(c)அல்இயற்கைக் கற்பனை
(d)எதுவுமில்லை

16. தகுதியான உணர்ச்சிக்குப் பொருந்தாத பண்பு எது?

(a)நல்ல காரணத்துடன் தூண்டப்படுவது
(b)உணர்ச்சியும் சூழலும் பொருத்தமின்றி இருத்தல்
(c)நல்ல நோக்கத்துடன் அமைதல்
(d)தகுந்த காரணங்களுடன் தூண்டப்படுவது

17. மருட்கை என்னும் மெய்ப்பாட்டுக்குரியது எது?

(a)மூப்பு
(b)பிணி
(c)வருத்தம்
(d)ஆக்கம்

18. கண்ணகியை, "சிலம்பு ஒன்று ஏந்திய கையள்" என இளங்கோவடிகள் பாடுவதில் வெளிப்படும் உணர்ச்சி எது?

(a)மருட்கை
(b)அச்சம்
(c)பெருமிதம்
(d)உவகை

19. "தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்" என்னும் திருக்குறள் உணர்த்தும் உணர்ச்சி எது?

(a)நகை
(b)இளிவரல்
(c)வெகுளி
(d)உவகை

20. "கலையின் வடிவம் என்பது ஒரு முகமாக இயையும் முழுமை" எனக் கூறியவர் யார்?

(a)மு. வரதராசன்
(b)வ. சுப. மாணிக்கம்
(c)க. கைலாசபதி
(d)தா. ஏ. ஞானமூர்த்தி

21. “பா என்பது பரந்துபட்டுச் செல்வதோர் ஓசை” என ஒலிநயத்திற்கு முதன்மை தந்து உரை கூறியவர் யார்?

(a)இளம்பூரணர் (b)நச்சினார்க்கினியர்
(c)பேராசிரியர் (d)எவருமில்லை

22. “நாமார்க்கும் குடியல்லோம்” என்பதில் திருநாவுக்கரசர் வெளிப்படுத்தும் உணர்ச்சி யாது?

(a)பெருமித உணர்ச்சி (b)கோப உணர்ச்சி
(c)வீர உணர்ச்சி (d)அன்புணர்ச்சி

23. இருகை, கருவை, வருக, ஒருவனே என்னும் சொற்களில் அமைந்துள்ள ஒலிநயம் எந்த வகையில் அடங்கும்?

(a)எதுகை (b)மோனை
(c)இயைபு (d)முரண்

24. தருமன் திரௌபதியை சூதிற் பணயமாக வைத்ததற்கு பாரதியார் கூறும் உவமை யாது?

(a)கோயிற்பூசை செய்வோர் சிலையைக் கொண்டு விற்றல் போலும்
(b)வாயில் காத்து நிற்போன் வீட்டை வைத்திழத்தல் போலும்
(c)ஓரிகழுகென் றிவையெல்லாம் தம துள்ளங் களிகொண்டு விம்மல் போல்
(d)வேள்விப் பொருளினையே புலை நாயின்முன் மென்றிட வைப்பவர் போல்

25. அறவியற் கொள்கையின் அடிப்படைக் கூறுகளுள் அடங்காதது எது?

(a)அறம், ஒழுக்கம் முதலியவற்றின் இன்றியமையாமையை வற்புறுத்துகிறது
(b)இலக்கியத்தின் உத்திகளுக்கு முக்கியத்துவம் தருகி
(c)அறிவுறுத்தும் பண்பு மேலோங்கித் தெரியும்
(d)இலக்கியப் படைப்பாளி ஒழுக்கசீலம் உடையவனாக இருக்க வேண்டும்

26. “இழுக்கா இயன்ற தறம்” என்னும் குறட்பாவில் திருவள்ளுவர் சுட்டாதது எது?

(a)அழுக்காறு
(b)அவா
(c)வெகுளி
(d)இன்சொல்

27. “யாம் மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும், வாய்மையின் நல்ல பிற” என்னும் குறட்பா அறமுணர்த்தும் பாங்கில் வெளிப்படுவது யாது?

(a)ஆசிரியரின் அனுபவம்
(b)ஆணையிடும் தொனி
(c)கட்டளையிடும் தோரணை
(d)வற்புறுத்தும் தொனி

28. தொல்படிமவியல் ஆய்வாளர்களில் குறிப்பிடத்தக்கவர் யார்?

(a)சிக்மண்ட் பிராய்டு
(b)குஸ்தவ் யுங்
(c)ஷெல்லி
(d)நார்த்ரோப் ஃபிரை

29. புறநானூற்றில் பாடப்பெறும் ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன் யார்?

(a)சிற்றரசன்
(b)அரசன்
(c)இனக்குழுத் தலைவன்
(d)பேரரசன்

30. கவிதையின் அடிநாதமாக நடப்பியலைக் கொண்டவர் யார்?

(a)இன்குலாப்
(b)அகிலன்
(c)ஜெயகாந்தன்
(d)பொன்னீலன்

31. புனைவியல் கவிஞர்களின் கற்பனையுலகச் சஞ்சரிப்புக்குச் சான்றாகும் பாரதியின் கவிதை எது?

(a)குருகோவிந்தர் (b)சுதந்திரதேவி
(c)அழகுத் தெய்வம் (d)பாஞ்சாலி சபதம்

32. உருத்தோற்றவியலின் வேறு பெயர் யாது?

(a)குறியீட்டியல் (b)படிமவியல்
(c)நடப்பியல் (d)புனைவியல்

33. "ஆகாயப் பந்தலில், நிலாப் பழம்" என்னும் அடிகள் எவ்வகைப் படிமத்தில் அடங்கும்?

(a)காட்சிப் படிமம் (b)கருத்துப் படிமம்
(c)ஓசைப் படிமம் (d)சுவைப் படிமம்

PART - B (7 X 6 = 42)

Answer **all** questions choosing either (a) or (b).

34. (a) திறனாய்வின் பயன் குறித்து விளக்குக.

[OR]

(b) தொல்காப்பியம் தமிழ்த் திறனாய்வின் அடிப்படையாதலை நிறுவுக.

35. (a) விதிமுறைத் திறனாய்வின் அடிப்படைப் பண்புகளை எழுதுக.

[OR]

(b) தமிழில் பாராட்டுமுறைத் திறனாய்வு குறித்தெழுதுக.

36. (a) கற்பனை என்பதற்கு வில்லியம் டெய்லர் கூறும் விளக்கத்தை எடுத்துரைக்க.

[OR]

(b) கற்பனையின் ஆற்றலை ஆராய்ந்து விளக்குக.

37. (a) ஆற்றல் மிக்க உணர்ச்சி பற்றி எடுத்துரைக்க.

[OR]

(b) தொல்காப்பியர் கூறும் மெய்ப்பாடுகள் இலக்கிய உணர்ச்சியாதலை விளக்குக.

38. (a) இலக்கியத்தின் கருத்துக்கும் வடிவத்துக்கும் உள்ள தொடர்பைப் புலப்படுத்துக.

[OR]

(b) இலக்கியப் படைப்பிற்கு உருவகத்தின் இன்றியமையாமையை விளக்குக.

39. (a) சமுதாயவியல் பார்வையின் போக்குகளை ஆராய்ந்துரைக்க.

[OR]

(b) இலக்கியத்தில் உளவியல் பெறுமிடத்தை விவரி.

40. (a) செவ்வியல் நெறியின் பண்புகளைத் தொகுத்துரைக்க.

[OR]

(b) குறியீட்டியலின் இயல்புகளை எடுத்துரைக்க.

N-1773

N-1774

COURSE CODE
205121

**ONLINE PROGRAMME EXAMINATIONS**
**M.A. DEGREE EXAMINATION, MAY 2025**
**First Year - Second Semester**
**TAMIL**
# இலக்கணம்- 2 — தொல்காப்பியம் சொல்லதிகாரம் சேனாவரையம்
**(CBCS - 2020 onwards)**

Time : 2 Hours    Maximum : 75 Marks

PART - A    (33 X 1 = 33)

Answer **all** the questions.

1. தனக்கென ஈற்றெழுத்தை ப் பெறாத  சொல் எது?

   (a)பெண்மை சுட்டிய பெயர்    (b)ஆண்மை திரிந்த பெயர்
   (c)தெய்வம் சுட்டிய பெயர்    (d)உயர்திணைப் பெயர்

2. பின்வருவனவற்றுள் ஒன்றன் பால் ஈறு அல்லாத ஒன்று உள்ளது. அது எது எனக் குறிக்க.

   (a)து    (b)டு
   (c)று    (d)பு

3. இதனுள் கருங்காலி -------------

   (a)எது    (b)யாது
   (c)யாவன்    (d)ஏது

4. ஆக்கமுடன் கூறவேண்டிய பொருள் யாது?

   (a)இயற்கைப் பொருள்    (b)செயற்கைப் பொருள்
   (c)உயர்திணைப் பொருள்    (d)அஃறிணைப் பொருள்

5. ஊரைச் சாரும் என்ற தொடரில் இடம்பெற்றுள்ள வேற்றுமை எது?

   (a)நான்காம் வேற்றுமை    (b)ஆறாம் வேற்றுமை
   (c)ஏழாம் வேற்றுமை    (d)இரண்டாம் வேற்றுமை

6. ஆறாம் வேற்றுமை  பயின்று வந்துள்ள தொடர் எதுவெனக் குறிக்க.

(a)எள்ளின் குப்பை (b)எள்குப்பை
(c)எள்ளது குப்பை (d)எட்குப்பை

7. அச்சக் கிளவிக்கு எவ்விரு வேற்றுமைகள் மயங்கி வ்ரலாம்?

(a)5, 4 (b)5,3
(c)5,2 (d)5,6

8. கிழங்கு மணற்கு ஈன்ற என்ற தொடரில் அமைந்துள்ள மயக்கம் எது?

(a)பொருள் (b)உருபு
(c)நான்காம் வேற்றுமை (d)இரண்டாம் வேற்றுமை

9. அண்மைச் சொல் எவ்வகையில் அமையும்?

(a)இயற்கையாக (b)செயற்கையாக
(c)அளபெடையாக (d)விளியாக

10. ல், ள்  ஆகிய எழுத்துகளைக் கொண்டு முடியும் சொற்கள் எவ்வாறு விளி ஏற்கும்?

(a)அயல் நீடும் (b)ஈற்றயல் நீடும்
(c)இயல்பாகும் (d)பிரிதாகும்.

N-1774

11. சொன்மை தெரிதலுக்கு எது எடுத்துக் காட்டு?

(a)சாத்தன் (b)பண்டு
(c)செய்தென் கிளவி (d)உறு

12. பல்லோர் குறித்த சினைநிலைப் பெயர் எது எனக் குறிக்க?

(a)அரசர் (b)சோழியன்
(c)தச்சன் (d)பெருங்காலர்

13. முறைப்பெயர் எத்தனை ?

(a)நான்கு (b)ஐந்து
(c)இரண்டு (d)ஒன்று

14. தாம் என் கிளவிக்கு எதற்கு உரியது?

(a)தன்மை (b)பன்மை
(c)ஒருமை (d)கடுமை

15. பின்வருவனவற்றுள் அஃறிணை குறிப்பு வினைமுற்றில் அடங்காத ஒன்று உள்ளது. அதனைக் கண்டறிக.

(a)இன்று (b)இல
(c)உடைய (d)மன்

N-1774

16. பின்வருவனவற்றுள் உயர்திணைத் தன்மைப் பன்மை வினைமுற்று விகுதியில் அமையாத ஒன்று உள்ளது? அது எது எனக் கண்டறிக.

(a)அம் (b)ஆம்
(c)எம் (d)ஓம்

17. வாழ்க என்பது எவ்வகை வினை?

(a)முன்னிலை (b)வினையெஞ்சு கிளவி
(c)வியங்கோள் (d)வளமை செப்பல்

18. பின்வருவனவற்றுள் வினையெச்ச வாய்பாடுகளில் அமையாத ஒன்று அமைந்துள்ளது. அது எது?

(a)செய்து (b)செய்யும்
(c)செய்பு (d)செய்தென

19. மன் என்னும் இடைச்சொல் பின்வரும் பொருண்மைகளில் ஒன்றைப் பெறவில்லை. அது எது?

(a)கழிவு (b)எச்சம்
(c)ஆக்கம் (d)ஒழியிசை

20. வியங்கோள் அசைச் சொல்லாக அமைவது எது?

(a)ஏ (b)மியா
(c)மோ (d)மா

N-1774

21. பின்வருவனவற்றுள் எது அசைநிலைச் சொல்லாக அமையாதது?

(a)யா (b)ஆ
(c)கா (d)அரோ

22. வினை மாற்று, அசைநிலை ஆகியவற்றுக்கு உரிய இடைச்சொல் எது?

(a)எற்று (b)மற்று
(c)உண்டே (d)ஓ

23. பசப்பு என்ற உரிச்சொல் தரும் பொருள் யாது?

(a)இயல்பு (b)தேய்வு
(c)நிறம் (d)வீரம்

24. மாதர் என்ற உரிச்சொல்லுக்கான பொருள் யாது?

(a)பெண்கள் (b)மக்கள்
(c)காதல் (d)பெருமை

25. நிலம் என்பது எவ்வகை செய்யுள் ஈட்டச் சொல்?

(a)இயற்சொல் (b)திரிசொல்
(c)திசைச்சொல் (d)வடசொல்

26. பொற்குடம் எவ்வகைத் தொகை?

(a)அன்மொழித் தொகை (b)வேற்றுமைத் தொகை
(c)உவமைத் தொகை (d)உம்மைத் தொகை

27. வெற்றிலை நட்டான எவ்வகை ஆகுபெயர் ?

(a)முதலாகு பெயர் (b)சினையாகு பெயர்
(c)இடவாகு பெயர் (d)பொருளாகுபெயர்

28. நானே செய்தேன் - என்பது எவ்வகை எச்சம்?

(a)தெரிநிலை (b)புணர்நிலை
(c)உம்மை (d)பிரிநிலை

29. அவையல் கிளவி --------------------------------கிளத்தல்

(a)உரைத்தவை (b)செறித்தவை
(c)மறைத்தவை (d)தெளிந்தவை

30. முதலமைச்சார் வந்தார் எவ்வகை வழுவமைதி ?

(a)திணை வழுவமைதி (b)பால் வழுவமைதி
(c)எண் வழுவமைதி (d)மரபு வழுவமைதி

N-1774

31. செப்பும் வினாவும் --------------------ஓம்பல்

(a)பிழையின்றி (b)வழுவின்றி
(c)கரவின்றி (d)முறையின்றி

32. அ, ஆ. வ என்பன எப்பால் ஈறுகள்?

(a)பலர் (b)ஒன்றன்
(c)பலவின் (d)ஆண்

33. இரட்டைக் கிளவி..............................

(a)அடுக்கி வரும் (b)பொருள் தரும்
(c)இரட்டின் பிரியா (d)தனியாய்த் தகும்.

PART - B (7 X 6 = 42)

Answer **all** questions choosing either (a) or (b).

34. (a) உயர்திணையில் பால் பிரிந்திசையாச் சொற்கள் பற்றி எழுதுக.

[OR]

(b) செப்பு ,வினா பற்றிய தொல்காப்பியச் செய்திகளை எழுதுக.

35. (a) மூன்றாம் வேற்றுமை குறித்து எழுதுக.

[OR]

(b) ஆகுபெயர் பற்றி எழுதுக.

36. (a) இகர, ஐகாரப் பெயர்கள் விளியேற்றல் குறித்து எழுதுக.

[OR]

(b) அஃறிணைப் பெயர்கள் பற்றித் தொல்காப்பியர் உரைப்பன யாவை?

37. (a) விரவுப் பெயர்கள் பற்றி எழுதுக

[OR]

(b) பெயரெச்சம், வினையெச்சம் பற்றி எழுதுக.

38. (a) இடைச்சொற்களின் பாகுபாடுகள் பற்றி எழுதுக.

[OR]

(b) அசைநிலை இடைச் சொற்கள் பற்றி எழுதுக.

39. (a) செய்யுள் ஈட்டச் சொற்கள் பற்றி எழுதுக.

[OR]

(b) தொல்காப்பியர் சுட்டும் மொழி புணர் இயல்பு பற்றி எழுதுக.

40. (a) வழுவமைதி பற்றிய தொல்காப்பியக் கருத்துகளை எழதுக.

[OR]

(b) சொற்களின் பொது இலக்கணம் பற்றிய செய்திகளைத் தொகுக்க

N-1775

COURSE CODE
205122

**ONLINE PROGRAMME EXAMINATIONS**
**M.A. (TAMIL) DEGREE EXAMINATION, MAY 2025**
**First Year - Second Semester**
**TAMIL**
**தமிழர் பண்பாடும் கலையும்**
**(CBCS - 2020 onwards)**

Time : 2 Hours | Maximum : 75 Marks

PART - A (33 X 1 = 33)

Answer **all** the questions.

1. இறந்தவர்க்குக் கல்நட்டு வழிபடும் முறை எந்த நூற்றாண்டு வரை இருந்துள்ளது என அறிஞர்கள் கருதுகின்றனர்?

(a)கி.பி. 10 (b)கி.பி. 11
(c)கி.பி. 12 (d)கி.பி.14

2. நாலாயிர திவ்விய பிரபந்தத்தை உருவாக்கியவர் யார்?

(a)ஆளவந்தார் (b)யமுனாச்சாரியார்
(c)நாதமுனிகள் (d)இராமானுசர்

3. சமணர்க்கு புண்ணிய திசை எது?

(a)வடக்கு (b)தெற்கு
(c)கிழக்கு (d)மேற்கு

4. இசுலாமிய இசை மரபுக்குச் சான்றாகும் கருவி எது?

(a)வீணை (b)தம்பூரா
(c)கிதார் (d)யாழ்

5. தமிழில் முதன்முதலில் வெளிவந்த உரைநடை நூல் எது?

(a)கிறித்துவ வேதோபதேசம் (b)கிறித்துவ வணக்கம்
(c)கிறித்துவ உபதேசம் (d)போர்ச்சுகீஸ் தமிழ்ப் புத்தகம்

6. தமிழ்நாட்டில் முதன்முதலில் எங்கு அச்சுப்பொறி அமைக்கப்பட்டது?

(a)நாகர்கோயில்　　(b)திருநெல்வேலி
(c)தரங்கம்பாடி　　(d)வேப்பேரி

7. அம்பிகை இடம்பெறும் மறை எது?

(a)ரிக்　　(b)யசுர்
(c)சாமம்　　(d)அதர்வணம்

8. பெண்கள் பள்ளிகள் திறக்கப்பட்ட ஆண்டு எது?

(a)1857　　(b)1834
(c)1841　　(d)1866

9. சாலி என்னும் உயர்வகை நெல் எங்கிருந்து வந்ததாகக் கருதப்படுகிறது?

(a)சாவகம்　　(b)சுமத்திரா
(c)கம்போடியா　　(d)தாய்லாந்து

10. யாழ் எந்த இசைக் கருவி?

(a)தோலிசைக் கருவி　　(b)துளையிசைக் கருவி
(c)நரம்பிசைக் கருவி　　(d)கஞ்சக் கருவி

N-1775

11. மன்னர்களின் வாயிலில் நின்று துயிலெடை பாடுவோர் யார்?

(a)கூத்தர் (b)பாணர்
(c)பொருநர் (d)விறலி

12. காலை நேரத்தில் பாடப்படும் பண் எது?

(a)செவ்வழி (b)காமரம்
(c)நைவளம் (d)மருதம்

13. போர்க்களத்தில் சங்கோடு சேர்த்து முழங்கப்பட்ட இசைக்கருவி எது?

(a)வயிர் (b)தடாரி
(c)ஆகுளி (d)பதலை

14. முதற் சங்க காலத்தில் வழங்கிய இசை நூல் எது?

(a)பெருநாரை (b)பெருங்குருகு
(c)முதுநாரை (d)பஞ்சபாரதீயம்

15. குழலிசையால் வீடுபேறு பெற்ற நாயனார் யார்?

(a)திருநீல கண்ட யாழ்ப்பாணர் (b)ஆனாய நாயனார்
(c)திருநீலநக்க நாயனார் (d)சண்டேச நாயனார்

16. சீர்காழி அருணாசலக் கவிராயர் பாடிய கீர்த்தனை எது?

(a)இராம நாடகக் கீர்த்தனை (b)சர்வ சமய சமரசக் கீர்த்தனை
(c)நந்தனார் சரித்திரக் கீர்த்தனை (d)எதுவுமில்லை

17. விறலியருள் ஆடி முதிர்ந்தாரை எங்ஙனம் அழைப்பர்?

(a)ஆடல் மடந்தையர் (b)பெருமுது பெண்டு
(c)தோரிய மடந்தையர் (d)முது பாடினி

18. எழுவரேனும் எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைகோத்தும் மண்டிலமாக நின்றும் ஆடும் கூத்து எது?

(a)வள்ளிக் கூத்து (b)குரவைக் கூத்து
(c)துணைங்கைக் கூத்து (d)வெறியாட்டு

19. வெற்றி பெற்ற வீரர் வாள் ஏந்தி ஆடுவதற்கு என்ன பெயர்?

(a)முன்தேர்க் குரவை (b)பின்தேர்க் குரவை
(c)வாள் நாட்கோள் (d)வாள் அமலை

20. வீரர் பற்றிய நாடகத்தின் பெயர் என்ன?

(a)சாத்துவதி (b)ஆரபடி
(c)கைசிகி (d)பாரதி

21. ஒருவர் கூட்டாமல் தானே வந்து தோன்றும் வரிக்கூத்தின் பெயர் என்ன?

(a)கண்கூடு வரி (b)காண் வரி
(c)உள் வரி (d)புற வரி

22. ‘மகாபாரத நச்சுப்பொய்கை விலாசம்’ என்னும் நாடகம் எழுதியவர் யார்?

(a)இராமச்சந்திர கவிராயர் (b)வைரக்கல் வேலாயுதப் புலவர்
(c)சரவணப் பண்டிதர் (d)பொன்னுசாமி நாயக்கர்

23. செங்காடு மாசிலாமணிக் கவிராயர் எழுதிய நாடகம் எது?

(a)மார்க்கண்டேயர் (b)திருநாளைப்போவார்
(c)சிறுத்தொண்டர் (d)சண்டேச நாயனார்

24. இளங்கோவடிகள் சுட்டும் ‘பிறவா யாக்கைப் பெரியோன் கோயில்’ எந்தக் கடவுளுக்கு உரியது?

(a)சிவன் (b)முருகன்
(c)பரசுராமன் (d)திருமால்

25. “செங்கல்,சுண்ணாம்பு,மரம்,உலோகம் இவையில்லாமல் மும்மூர்த்திகட்கு விசித்திரசித்தன் அமைத்த கோயில் இது” என்னும் கல்வெட்டு எங்கு உள்ளது?

(a)சீயமங்கலம் (b)மாமண்டூர்
(c)மகேந்திரவாடி (d)மண்டகப்பட்டு

26. ‘சித்திரகாரப்புலி’ என்ற சிறப்புப் பட்டம் பெற்ற மன்னன் யார்?

(a)முதலாம் மகேந்திரவர்மன் (b)நரசிம்ம வர்மன்
(c)இராசசிம்மன் (d)இரண்டாம் மகேந்திரவர்மன்

27. பார்வதியின் ஓவியம் எங்கு தீட்டப்பட்டுள்ளது?

(a)சித்தன்னவாசல் (b)காஞ்சிபுரம்
(c)பனைமலை (d)திருமலைப்புரம்

28. தஞ்சைப் பெருவுடையார் கோயில் கருவறை ஓவியத்தில் மாமன்னன் இராசராசனுடன் காணப்பெறும் அடியார் யார்?

(a)திருஞானசம்பந்தர் (b)திருநாவுக்கரசர்
(c)சுந்தரர் (d)கருவூர்த்தேவர்

29. மதுரை நாயக்கர் கால ஓவியம் எங்கு உள்ளது?

(a)காஞ்சி (b)காளத்தி
(c)பட்டீசுவரம் (d)திருவீழிமிழலை

30. தமிழகத்தில் கற்சிற்பங்களைத் தொடங்கி வைத்த பெருமைக்குரியோர் யாவர்?

(a)சேரர் (b)சோழர்
(c)பாண்டியர் (d)பல்லவர்

31. சண்டீசப் பதம் என்னும் உலகப் புகழ்பெற்ற சிற்பம் எங்கு உள்ளது?

(a)தஞ்சாவூர் (b)தாராசுரம்
(c)கங்கைகொண்ட சோழபுரம் (d)திருபுவனம்

32. மன்னர் முதலியோருக்கு எடுக்கப்பட்ட சிலைகள் எவ்வகையில் அடங்கும்?

(a)தெய்வ உருவங்கள் (b)இயற்கை உருவங்கள்
(c)கற்பனை உருவங்கள் (d)படிமை உருவங்கள்

33. செப்புத் திருமேனிகளின் பொற்காலம் எது?

(a)நாயக்கர் காலம் (b)பாண்டியர் காலம்
(c)சோழர் காலம் (d)விசயநகரர் காலம்

## PART - B (7 X 6 = 42)

Answer **all** questions choosing either (a) or (b).

34. (a) சைவம் உலகுக்கு உணர்த்திய நெறியை எடுத்துரைக்க.

[OR]

(b) அச்சுப்பொறி வளர்ச்சிக்கு கிறித்தவர்களின் பங்களிப்பை விவரி.

35. (a) மராட்டியப் பண்பாடு குறித்துக் கட்டுரைக்க.

[OR]

(b) அழகுக் கலைகள் பற்றித் தொகுத்துரைக்க.

36. (a) சிலப்பதிகாரம் உணர்த்தும் இசை பற்றிய நுட்பங்களை விவரி.

[OR]

(b) சோழர் கால இசை குறித்து எடுத்துரைக்க.

37. (a) சிலப்பதிகாரம் சுட்டும் பதினோரு ஆடல்களைத் தொகுத்துரைக்க.

[OR]

(b) பல்லவர் கால நாடகக் கலை குறித்து விவரி.

38. (a) நாடக வளர்ச்சியில் நாடக சபைகளின் பங்களிப்பைக் கட்டுரைக்க.

[OR]

(b) திருநாவுக்கரசர் சுட்டும் கோயில் வகைகளை விவரி.

39. (a) சங்க கால ஓவியக் கலை குறித்துக் கட்டுரைக்க.

[OR]

(b) விசயநகர மன்னர்கள் கால ஓவியங்கள் குறித்து எடுத்துரைக்க.

40. (a) மாமல்லபுரச் சிற்பங்கள் குறித்து விவரி.

[OR]

(b) இருவகை செப்புத் திருமேனிகள் பற்றி விளக்குக.

| N-1776 |
|---|

| COURSE CODE |
|---|
| 205123 |

**ONLINE PROGRAMME EXAMINATIONS**

**M.A. DEGREE EXAMINATION, MAY 2025**

**First Year - Second Semester**

**TAMIL**

**திறனாய்வுக் கோட்பாடு**

**(CBCS - 2020 onwards)**

Time : 2 Hours Maximum : 75 Marks

PART - A (33 X 1 = 33)

Answer **all** the questions.

1. மீமெய்மைக் கொள்கைகளை வலியுறுத்திய முன்னோடிகள்

(a)ஆஸ்கர் ஒயில்டு (b)டி. எஸ். எலியட்
(c)வில்லியம் இர்ம்சர் (d)மார்க்சிம் கார்க்கி

2. டாடாயிசத்தையும் பிராய்டின் கொள்கையையும் அடிப்படையாகக் கொண்டது

(a)மீமெய்ம்மையியல் (b)வெளிப்பாட்டியல்
(c)தனிப்பாங்கியல் (d)முதன்மையியல்

3. இலக்கியத் திறனாய்வும் இலக்கிய வரலாறும் பிரிக்க முடியாதவை என்றவர்

(a)எல். செலீன் (b)ரெனவெல்லக்
(c)ஜேம்ஸ் ஜோய்ஸ் (d)எஸ்ட்ரா

4. முதன்முதலில் நூல் வடிவில் இலக்கிய வரலாறு எழுதியவர்

(a)மயிலை. சீனி. வேங்கடசாமி (b)சைமன் காசிச் செட்டி
(c)கா. சு. பிள்ளை (d)எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளை

5. அறிவியல் அடிப்படையில் மொழியை ஆராயத்தொடங்கிய அறிஞர்களுள் ஒருவர்

(a)பெர்டினான் டிசஸ்யூ (b)டேவிட் ஹ்யூம்
(c)ஜான் எல்லியஸ் (d)கென்னத் பர்க்

6. கவிதைக் கொள்கை என்ற நூலை எழுதியவர்

(a)ஆலன்டேட் (b)ஏ. சி. பிராட்லி
(c)எட்கர் ஆலன்போ (d)வாரன்

7. காவிய காலம் என்ற நூலை இயற்றியவர்

(a)மு. வரதராசன் (b)க. கைலாசபதி
(c)வையாபுரிப் பிள்ளை (d)மறைமலையடிகள்

8. தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும் என்ற நூலின் ஆசிரியர்

(a)ரா. சீனிவாசன் (b)ஆ.வேலுப்பிள்ளை
(c)தெ. பொ. மீனாட்சிசுந்தரம் (d)இலக்குவனார்

9. மொழியியலும் கவிதையியலும் என்றக் கட்டுரையை எழுதியவர்

(a)ஓமன் (b)ரோலந்த் பிராத்
(c)குல்லர் (d)ரோமன் யகோப்சன்

10. தொல்காப்பியர் கூறும் வண்ணங்களின் எண்ணிக்கை

(a)20 (b)16
(c)32 (d)24

11. புனைகதைகளில் கிராமப்புறச் சூழலைச் சித்தரிப்பதில் முன்னோடியாக விளங்கும் படைப்பு

(a)மங்கையர்க்கரசியின் காதல் (b)சமுதாய வீதி
(c)கமலாம்பாள் சரித்திரம் (d)எங்கே போகிறோம்

12. இவற்றுள் சமுதாயக் குழுக்களைச் சித்திரிக்கும் புதினம்

(a)நெடுநேரம் (b)குறிஞ்சித்தேன்
(c)வாய்க்கால் (d)தியாகபூமி

13. சமூக ஒழுக்கம், சட்டம், நீதி வழமை போன்றவை எதனைப் பிரதிபலிக்கும் செய்தி

(a)அரசு (b)பாதுகாப்பு
(c)அறம் (d)பொருள்

14. இயங்கியல் எதை வற்புறுத்துகிறது

(a)ஆப்தவாக்கியம் (b)அனுமானம்
(c)தர்க்கம் (d)பிரத்தியக்கம்

15. இரண்டாவது பாலினம் என்ற நூலை இயற்றியவர்

(a)சய்மோன் தெ பௌவோ (b)பெட்டி பிரிடான்
(c)ஜுடித் பட்லர் (d)எம்மா கோல்ட்மேன்

